# கனவுகள் மெய்ப்படக் கைகொடுக்கும் ஆட்சி ! காலத்தை வெல்லும் கம்பீரக் காட்சி !

ஓராட்சிக் காலத்தில்
ஒப்பரிய திட்டங்கள்
நீராட்சி செய்யும்
நெடுங்கடல் போல
நிறைந்து வழிந்து
நிற்கின்றன- நம்
நெஞ்சங்களில்!

உறைந்து கிடக்கும்
உச்சிப் பனிமலை
உருகிப் பெருகி
ஓடிவரும் நதியாகிக்
கழனிகளை உருவாக்கிக்
கவலை தீர்ப்பதுபோல்..

உள்ளச் சிகரத்தில்
உறைந்து கிடக்கும்
உத்தம உணர்வுகளை
உருக்கிப் பெருக்கிச்
சாதனைத் திட்டங்களைச்
சரஞ்சரமாய் அறிவித்து
சாமான்ய மக்களின்
சமகால வாழ்வில்
சர்க்கரை நதியாய்
ஓடிக் கொண்டிருக்கிறார்
நம்
தங்கத் தமிழ்நாட்டின்
தகைசால் முதலமைச்சர்!

எழுபத்து ஐந்தாண்டு
இலட்சியப் போர்க்களத்தில்..

சித்தாந்த வாளெடுத்து
சீர்திருத்த வேலெடுத்து

சிறுமைக் குணத்தர்களைச்
சிதைக்கின்ற சூளெடுத்து

இதற்குள் இதைமுடிக்க
வேண்டுமென நாளெடுத்து

இன்பத் தமிழகத்தை
இமயத்தின் மேலெடுத்து

இவர்போல் இன்னொருவர்
இல்லையெனும் பேரெடுத்து

‘கொடுத்தேன்; இன்னும்
கொடுப்பேன்’ என்னும்
நம்பிக்கைச் சீர்கொடுத்து
நாட்டை நடத்துகிறார்
நந்தம் முதலமைச்சர்!

‘எல்லாரும் எல்லாமும்
எப்போதும் பெறவேண்டும்
கல்லாரே இல்லாத
காலம் வரவேண்டும்

கன்னித் தமிழகத்தைக்
கல்விச் சமுத்திரமாய்
முன்னிலைப் படுத்தி
முகடு தொடவேண்டும்

பொல்லாரை வரவேற்கும்
பொல்லாங்கு மனத்தாரை
இனங்கண்டு கொண்டு
எடுத்தெறிய வேண்டும்

சினங்கொண்ட சிங்கத்தின்
சீற்றத்தை உள்வாங்கி
இனங்காக்க வேண்டும்
இடர்நீக்க வேண்டும்

முகமூடி இட்டு
மோசடியாய் நுழைவோர்க்கு
முடிவுரை எழுதி
முடிசூட வேண்டும்’

என்னும் குறிக்கோளில்
இந்த நொடிவரைக்கும்
கண்ணுங் கருத்துமாய்க்
களமாடிக் கொண்டிருக்கும்

திராவிடவியல் தீரர்
தெளிந்தமதி வீரர்
அமைதிமிகு சீலர்
அறப்பரி பாலர்
அன்புத் தலைவர்-நம்
அருமைத் தளபதியார்..

‘உங்க(ள்) கனவச்
சொல்லுங்க(ள்)’ என்னும்
உயரிய திட்டத்தை
உருவாக்கியுள்ளார்!

தன்னேரிலாத
தலைவரின் புதுநோக்கு
பொன்னேரியில் நேற்றுப்
பூத்துப் பொலிந்து
பொற்காலச் சுவடொன்றைப்
பொறித்திருக்கிறது!

கதவுகளைத் தட்டிக்
கனவுகளைக் கேட்டு
உதவிகளைச் செய்ய
ஊரெங்கும் தொண்டர்கள்
ஓடிவரப் போகின்றார்!

தேசமே வியக்கும்
திராவிட ஆட்சியில்
பெற்றபயன் கேட்டுப்
பெருமை கொள்ளவும்

தேவைப் படுவன
எவையெனக் கேட்டுச்
சேவை மனத்துடன்
செய்து கொடுக்கவும்

புத்தம் புதிய
கனவுகள் இருந்தால்



அவற்றை
அரசின் பார்வைக்கு
அனுப்பி வைக்கவும்
அத்தனை மக்களின்
ஆசைகள் தீர்க்கவும்

முத்தனைய திட்டமொன்றை
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
அன்னை மனத்தோடு
அறிவிப்புச் செய்து
ஆரம்ப விழாவும்
அழகாகச் செய்து விட்டார்!

அடிமன ஆழத்தில்
ஒரு
வேழத்தின் வேகம்
மிகுந்து தெறிக்கிறது
நம் முதல்வரிடம்!



டாக்டர்
எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி.,
மேனாள் ஒன்றிய இணையமைச்சர்

காகிதக் கோட்டைகளில்
கற்பனை வேட்டைகளில்
ஆடிக் களிப்பவர்களின்
அரசியல் மூச்சைப்
பதறவைக்கும் திட்டங்களை
அவர்
படைத்துக் கொண்டே இருக்கிறார்!
எதிரிகளின் வியூகங்களை
உடைத்துக் கொண்டே இருக்கிறார்!
பந்தயக் குதிரையாய்ப்
பாய்ந்து கொண்டே இருக்கிறார்!

வீறுகொண்டு வெளிப்படும்
அவரின்
வெளிச்சச் சிந்தனையில்
விட்டில் பூச்சிகளாய்
விழுந்து அழிகிறார்கள்
வெட்டிப் பேச்சு வீரர்கள்!

தமிழகம் காக்கும்
தத்துவக் கவசங்களைப்
பிளக்க நினைக்கும்
பிழைகளை எரிக்கும்
அக்கினிக் குழம்பாக
அவதாரம் எடுத்து நிற்கிறார்
நம் அறிவார்ந்த முதலமைச்சர்!

வேகம் விவேகம்
இரண்டும் கலந்த
இலட்சியம் சுமந்த
எஃகு மனிதராய்..
திராவிட இயக்கத்தின்
மோகக் கனவுகளை
தாக உணர்வோடு
தழுவி எடுத்து
ஆகச் சிறந்த
அரசியல் பாதையைத்
தன்மானத் தங்கமும்
தனிவீர வைரமும் கலந்து
அங்குலம் அங்குலமாய்
அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்!

‘அவரைவிட இவர்
ஆபத்தானவர்’ என்று
அரசியல் எதிரிகள்
அங்காந்து நின்று
அச்சப்படுகிறார்கள்
இன்னமும்!

வில்லை எடுத்து
அம்பைத் தொடுத்த
அடுத்த கணத்தில்
இலக்கை வீழ்த்தும்
போர்வீரன் போல்-
எதிரிப் படைகள்
எத்தனை வரினும்
அத்தனை மீதும்
இவர்தொடுக்கும் அம்புகள்..
மக்களின் மீதான
‘அன்புகளாய்’ மாறும் போது

படைகள் எல்லாம்
பனிமுட்டைகள் ஆகி
உடைந்து போகின்றன
ஒவ்வொரு நாளும்!

நல்வாழ்வுத் திட்டங்கள்
நலவாழ்வுச் சட்டங்கள்
அமைதி முயற்சிகள்
அறிவுலகப் பயிற்சிகள்
புதுயுகம் படைக்கும்
புத்தகப் புரட்சிகள்

முற்போக்கு வானத்தின்
முழுமதியாய் எண்ணங்கள்
பிற்போக்கைத் தகர்த்தெறியும்
பெரியாரின் வண்ணங்கள்
என்று
திராவிட மாடலின்
தெளிவான சின்னங்கள்
உதயசூரியன் போல்
ஒளிவீசி நிற்கின்றன
ஒவ்வொரு உள்ளத்திலும்!

துடைத்தெறிய முடியாத
தொண்டுகளின் உச்சத்தில்
கணித்தறிய முடியாத
கம்பீரத்துடன் வீற்றிருக்கிறார்
பெரியாரியலின் பிதாமகர்
நம் முதலமைச்சர்!

இதோ ஒரு ‘அன்பு’
இன்றுமுதல் பாய்கிறது..
‘உங்க கனவச்
சொல்லுங்க’ என்றபடி
இல்லங்களையும்
உள்ளங்களையும் தேடி!

வெல்லும் தமிழ்நாடு
என்னும் வாசகம்
வெற்று வாசகம் அன்று!
அது வெற்றி வாசகம்
என்பதை
நிலைநாட்டப் போகும்
நித்திலத் திட்டங்களில்
முத்திரைத் திட்டமிது!

எங்கள் தலைவர்
எண்ணங்கள் மலரும்
சோலையாகும் போதெல்லாம்
எதிரிகளின் எண்ணங்கள்
பாலையாகும் பரிதாபத்தைப்
பார்த்து வருகிறோம் நாம்!
இனியும்
பார்க்கத்தான் போகிறோம்!

பால் புளிக்காது
பகல் இருளாது
தேன் கசக்காது
தீரர்கள் உறைவிடம்
திராவிடம் தோற்காது!

தங்கத் தமிழகமே..!
அழைக்கிறார் உங்கள்
அன்புத் தலைவர்

ஒளிவிளங்கும் முகத்தோடு
உடனடியாய் வந்து..
உங்க(ள்) கனவச் சொல்லுங்க(ள்)!
உரிமையைப் பெற்று
உவகை கொள்ளுங்கள்!
தலைவர் வழியில்
தலைநிமிர்ந்து நில்லுங்கள்!
வெற்றித் திலகமிட்டு
வாழ்க்கையை வெல்லுங்கள்!

## “உங்க கனவ சொல்லுங்க” திட்டம்!

# மேடையிலேயே பெண்களின் கனவை நிறைவேற்றிய முதல்வர்!

## போட்டி போட்டு கோரிக்கை வைத்த பெண்கள்!

திருவள்ளூர், ஜன. 11-

‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டத் தொடக்க நிகழ்ச்சியில் பேசிய பெண் கவிதா, “வீடுகளுக்கு பட்டா வழங்க வேண்டும்’ என்றார். **இதற்கு பதிலளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், “தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் 23 லட்சம் பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஆட்சித் தலைவருடன் பேசி பட்டா வழங்கப்படும்” என்றார்.**

பிரியங்கா என்பவர் பேசும்போது, “கீழ்மேனி கிராமம், கல்லூரியில் 3ம் ஆண்டு படிக்கிறேன். புதுமைப்பெண் திட்டத்தில் 1000 ரூபாய் கிடைக்கிறது.

லேப்டாப் வாங்கி விட்டேன். அப்பா விவசாயி. மானியத்தில் டிராக்டர் கொடுத்துள்ளனர். எங்களுடைய கிராமத்தில் மினி பஸ் வழங்க வேண்டும்” என்றார். **அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “நல்லா பேசுனீங்க. லேப்டாப் கிடைத்துள்ளது. நல்லா படிங்க. மினி பஸ் விட நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.**

கற்பகம் என்பவர் பேசும்போது, “மகளிர் பேருந்தில் இலவசமாக பயணம் செய்து வருகிறேன். 2 குழந்தைகள் உள்ளது.

அரசின் பல்வேறு திட்டங்களில் பயன்பெற்று வருகிறேன். எங்க ஊரில் மழை பெய்தால் தீவு போன்று உள்ளது. எங்கும் போக முடியாது. பள்ளிக்கு போக முடியாது. பாலம் கட்டித்தர வேண்டும்” என்றார். **அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், “பாலம் கட்ட, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.**

ராணிப்பேட்டை அமுதா பேசும்போது, “தி.மு.க. அரசு மகளிருக்காக பல்வேறு திட்டங்கள் வழங்கி வருகிறது.

மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், நலன்காக்கும் ஸ்டாலின், மகளிர் சுயநிதி உதவி குழு. நான் மகளிர் சுயநிதி உதவி குழு மூலமாக ஒரு மிஷின் வாங்கி மாவு அரைத்து வியாபாரம் செய்கிறேன். எனது கணவர் மேஸ்திரி. வங்கி கடன் பெற்று தர வேண்டும். மகளிர் சுய உதவி குழுவில் எம்.பி.சி.-க்கு மானியத்தில் லோன் கிடைப்பதில்லை. இதெல்லாம் கிடைத்தால் நன்றாக இருக்கும்” என்றார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின், “எல்லாமே கொடுத்தா நல்லா இருக்கும் என்கிறீர்கள். எவ்வளவோ கிடைத்தாலும் உங்களுக்கு குறை இருக்கிறது. எல்லாம் கிடைக்க வழி செய்கிறோம். அமுதா வாழ்க” என்றார்¬**

காஞ்சிபுரம் சங்கீதா, “மகளிர் சுயஉதவி குழுவில் இருக்கிறேன். லோன் வாங்கி ஒரு பெட்டிக்கடை வைத்திருக்கிறேன். மகளிர் விடியல் பயணம் மூலம் வேலைக்கு செல்ல மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது. அப்பா, அம்மாவுக்கு மக்களைத் தேடி மருத்துவ திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

இதன்மூலம் அப்பாவுக்கு டயாலிசியஸ் செய்கிறேன். உங்களுக்கு ரொம்ப நன்றி. மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு மானியத்துடன் அதிக கடன் வழங்க வேண்டும்” என்றார். **முதல்வர் மு.க. ஸ்டாலின், “நீங்கள் சொன்ன கோரிக்கை பரிசீலிக்கப்படும்” என்றார்.**

செங்கல்பட்டு அம்முகுட்டி, “நான் மீனவ சமுதாய பெண். மீன்பிடி தடை காலத்தில் நீங்கள் கொடுக்கும் நிதியை வைத்து குடும்பமே பயன்பெறுகிறது.

எனது பெண் செய்யூர் கல்லூரியில் படிக்கிறார். எனக்கு 2 பெண் குழந்தைகள். அவர்களுக்கு உயர் கல்வி தர வேண்டும் என்பதே எனது லட்சியம். மழை காலங்களில் மீன்பிடி வலையை பாதுகாக்க அரசு ஏற்பாடு செய்து தர வேண்டும்” என்றார். **முதல்வர் மு.க.ஸ்டாலின், “நிச்சயம் உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்” என்றார்.**

திருநெல்வேலி, கல்பனா, “எனக்கு 3 குழந்தைகள். விடியல் பயணம் எனக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. எனது மகன் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தில் ரூ.1000 வாங்கி வருகிறான். எனக்கு சொந்த வீடு கிடையாது. கலைஞர் கனவு திட்டத்தில் ஒரு வீடு கட்டித்தர வேண்டும்” என்றார்.